செ.வெ.எண்: 752 நாள்:13.9.2008

# பத்திரிக்கை செய்தி

## இந்திய நாட்டிற்கே முதன்மையாக அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் 24 மணி நேர பிரசவ சேவை அளிக்கும் திட்டம்.

---

தமிழகத்தில் தற்போது 1421 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் ஏற்கெனவே 1000 ஆரம்ப சுகாதார நிலையங்கள் **24 மணி நேர பிரசவ சேவை மையங்களாக செயல்படுகின்றன.**

மீதமுள்ள 421 ஆரம்ப சுகாதார நிலையங்களும் நடப்பாண்டில் 24 மணி நேர பிரசவ சேவை மையங்களாக செயல்படும் என கடந்த சட்ட பேரவை மானிய கோரிக்கையின் போது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது.

அரசு அறிவித்தப்படி தற்போது இந்த 421 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களும் 24 மணி நேர பிரசவ சேவை மையங்களாக செயல்பட அரசு ஆணையிட்டுள்ளது.

**இத்திட்டம் வருகிற 15.9.2008 அன்று பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு பிறந்த நாளன்று மாண்புமிகு முதல்வர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட உள்ளது. இதனால் 15.9.2008 முதல் தமிழகத்திலுள்ள அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களும் 24 மணி நேர பிரசவ சேவை மையங்களாக 100 விழுக்காடு முழுமை பெறுகிறது. இது இந்தியாவிலேயே வேறெந்த மாநிலத்திலும் செய்யப்படாத சாதனையாகும்.**

**இத்திட்டத்தின் சிறப்பம்சங்கள்:-**

- பயிற்சி பெற்ற செவிலியர்களால் 24 மணி நேர பிரசவ சேவை உறுதி செய்யப்படுகிறது.

- தாய்சேய் மரணம் தவிர்க்கப்பட்டு, 24 மணி நேர சிறப்பான பிரசவ சேவை கிராமப்புற ஏழை எளிய மக்களுக்கு கிடைக்கிறது.
- அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் பிரசவங்கள் அவர்கள் வாழும் கிராமங்களுக்கு அருகிலேயே நடப்பதால் நல்ல சுகாதாரமான சூழ்நிலைகளில் மக்களுக்கு பிரசவ சேவை கிடைக்கிறது.
- சாதாரண பிரசவத்திற்கு ஏழை எளியோர் தனியார் மருத்துவமனைகளுக்குச் சென்று பிரசவத்திற்காக செலவிடும் செலவு தவிர்க்கப்படுகிறது.

**24 மணிநேர சேவையின் பின்னணி விவரம்:-**

- மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் ஆலோசனைப்படி **1999** ஆம் ஆண்டில் 3 செவிலியர் பணியமைப்புடன் கூடிய இந்த 24 மணி நேர பிரசவ கவனிப்பு சேவை திட்டம் 90 ஆரம்ப சுகாதார நிலையங்களில் இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- பின்னர் இத்திட்டம் படிப்படியாக உருப்பெற்று மேலும் 90 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் விரிவடைந்து, ஐந்தாம் முறையாக மாண்புமிகு கலைஞர் அவர்களின் அரசு பொறுப்பேற்றவுடன் **மாண்புமிகு கலைஞர் அவர்களின் ஆணைப்படி** 600 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 1800 செவிலியர்களுடன் விரிவுபடுத்தப்பட்டது.
- கடந்த நிதியாண்டில் **மாண்புமிகு கலைஞர் அவர்களின் ஆணைப்படி** மேலும் 220 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 660 செவிலியர்களுடன் விரிவுபடுத்தப்பட்டு **1000 ஆரம்ப சுகாதார நிலையங்கள் 24 மணி நேர பிரசவ சேவை மையங்களாக ஆணையிடப்பட்டு தற்போது செயல்பட்டு வருகின்றன.**

- நடப்பு நிதியாண்டில் மாண்புமிகு கலைஞர் அவர்களின் ஆணைப்படி மீதுமுள்ள 421 ஆரம்ப சுகாதார நிலையங்களும் 24 மணி நேர பிரசவசேவை மையங்களாக ஆணையிடப்பட்டு தமிழகத்தில் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களும் 24 மணி நேர பிரசவ சேவை மையங்களாக செயல்பட உள்ளன. இதன்படி நடப்பாண்டில் புதிதாக 1263 செவிலியர்களும், 842 துப்புரவுப்பணியாளர்களும் நியமனம் செய்யப்பட உள்ளனர். இதனை செயல்படுத்த ஆண்டொன்றிற்கு ரூ.6 கோடியே 6 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே இந்த 24 மணி நேர பிரசவ சேவையை அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் செயல்படுத்தும் முதல் மாநிலமாக தமிழகம் திகழ்கிறது. இந்த வரலாற்று சாதனையை நிகழ்த்திய பெருமை மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களையே சாரும்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9